மாண்புமிகு பேரவைத் தலைவர் : மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது அவர்கள் தாராளமாகப் பேசலாம், அதன் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது, எனவே உறுப்பினர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மின் பங்கீட்டுப்பிரிவு, கன்னியாகுமரி.

*290. வினா—திரு. ஏ. பாலையா : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மின் திட்டத்திலிருந்து வள்ளியூர், நாகர்கோவிலாகிய இரு மின் கோட்டங்களையும் பிரித்து கன்னியாகுமரி மின் திட்டம் என்ற பெயரில் ஒரு பிரிவு நாகர்கோவிலை தலைமை இடமாக கொண்டு நிறுவ செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. பாலையா : கன்னியாகுமரி மாவட்டத்தைத் தனி மின்திட்ட மாவட்டமாக 1971-72-க்குள் நிறுவ அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதற்குத்தான் சொன்னேன் பரிசீலனையில் இருக்கிறது என்று.

கோவை முன்னாள் படையினரின் மோட்டார் போக்குவரத்துக் கூட்டுறவுச் சங்கம்.

*291 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை, முன்னாள் ராணுவத்தினருக்கான மோட்டார் போக்குவரத்துக் கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர் சங்கத்திடமிருந்து 7—7—1971 நாள் அளவில் அரசுக்கு முறையீடு ஒன்று வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்பேரில் எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) பேருந்து அதிபர் ஒருவர் 10 பேருந்து அனுமதிச் சீட்டுகள் வரை தான் வைத்திருக்கலாம் என மேல் வரம்பு வரையறுக்கும் 1971-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு இரண்டாவது திருத்த) அவசரச் சட்டத்தின் விதித்துறைகளிலிருந்து முன்னாள் படையினரின் மோட்டார் போக்குவரத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விலக்களிக்க வேண்டுமெனச் சங்கம் கோரியது. இந்த கோரிக்கை அரசால் ஆய்ந்து பரிசீலிக்கப்பட்டு மறுக்கப்பட்டது. அவ்வண்ணமே சங்கத்திற்கும் அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டிலுள்ள சிற்பிகள்

*292 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலம் முழுவதும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தபதிகள் எத்தனை பேர் உள்ளனர் ?

(இ) அவர்களுக்கு தொழில் நிமித்தம் கடன் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

1971 டிசம்பர் 11]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) அரசு 18-8-1971 முடிய 118 ஸ்தபதிகளை அங்கீகரித்து உள்ளது.

(இ) இல்லை.

Books on Tamil Archanas.

* 293 *Q*.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether books on Tamil Archanas have been prepared by the Tamil Nadu Deivigha Peravai at the instance of the Government; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU K. T. K. THANGAMANI : I only want to say that within one hour we have completed 48 questions. Probably this will be a record not only for this Legislature but also for other Legislatures and Lok Sabha. முற்ப 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாராட்டாகயிருந்தாலும் எப்படியிருந்தாலும் அமைச்சர்களும் உறுப்பினர்களும் இன்னும் கொஞ்சம் ஒத்துழைப்பு தந்தால் இன்னும் அதிகமாக கேள்விகள் கேட்க முடியும். கேள்விகளில் பொது முக்கியத்துவம் வாய்ந்த கேள்விகளும் இருக்கின்றன. அந்த ஊரிலே பாலம் கட்டப்பட்டதா என்பதெல்லாம் அந்த ஸ்தலங்களில் அக்கறை உள்ள கேள்விகள். அவைகள் முக்கியமானவை அல்ல என்று சொல்லவில்லை. இந்த மன்றத்திலே கேள்விகளும் சுருக்கமாக இருந்து பதில்களும் சுருக்கமாக அமைந்தால் இன்னும் சிறப்பாக அமையும்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் உள்ள பெரிய கோயில்களில் எத்தனை கோயில்களில் இன்றைக்கு தமிழில் அர்ச்சனை நடைபெறுகின்றது. அப்படி நடைபெறாத கோயில்களில் உடனடியாகத் தமிழில் அர்ச்சனை நடைபெறுவதற்கு முயற்சியெடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலேயிருக்கின்ற எல்லா ஆலயங்களிலும் தமிழிலே வழிபாடு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. உறுப்பினரவர்கள் அப்படி ஏதாவது நடைபெறாத ஆலயங்கள் இருந்து, குறிப்பிட்டால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக் குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]